இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 223 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – பங்குனி 11 – ஞாயிற்றுக்கிழமை 24 மார்ச் 2024 – திருச்சி ★★ 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 223 : Thiruvalluvar Year - 2055 - Panguni 11 - Sunday 24 March 2024 - Trichy ★★ 12 Pages ₹ 5.00

## இந்தியாவைக் காக்கும் வெற்றிப் பயணத்தை திருச்சியிலிருந்து தொடங்குகிறேன்!

# திருச்சிப் பாதை எப்போதும் நம் வெற்றிப் பாதை!

## நாடாளுமன்றத் தேர்தலில் பிரச்சாரத்தை தொடங்கி தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் எழுச்சி முழக்கம்!



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (22.3.2024) திருச்சிராப்பள்ளி, சிறுகனூரில் நடைபெற்ற இந்தியா கூட்டணியின் மக்களவைத் தேர்தல் பிரச்சார முதல் பொதுக் கூட்டத்தில், திருச்சி தொகுதி வேட்பாளர் ம.தி.மு.க. தலைமைக் கழக செயலாளர் துரை வையாபுரி அவர்களையும், பெரம்பலூர் தொகுதி வேட்பாளர் அருண் நேரு அவர்களையும் அறிமுகப்படுத்தி, பிரச்சாரத்தை தொடங்கி வைத்து உரையாற்றினார்.

**திருச்சி, மார்ச் 24 –**

**திருச்சியில் பிரம்மாண்டமாக நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தல் பிரச்சார கூட்டத்தில் உரையாற்றிய தலைவர், முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பா.ஜ.க.வில் இருக்கின்ற ஒவ்வொருவருக்கும் சொல்கிறேன் உங்களுடைய ஆணவம்தான் பா.ஜ.க.வை வீழ்த்தப் போகிறது! இந்தியாவைக் காக்கும் வெற்றிப் பயணத்தை திருச்சியில் இருந்து தொடங்குகிறேன்! திருச்சிப் பாதை எப்போதும் – வெற்றிப் பாதை என உறுதிபடக் கூறினார்.**

கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (22.03.2024) திருச்சியில் நடைபெற்ற 'திருச்சி, பெரம்பலூர்' மக்களவைத் தொகுதிகளுக்கான தேர்தல் பரப்புரையில் கலந்து கொண்டு ஆற்றிய எழுச்சியுரையின் விவரம் வருமாறு:–

டெல்லி செங்கோட்டையை யார் கைப்பற்ற வேண்டும் என்று தீர்மானிக்க இந்த மலைக் கோட்டை மாநகரில் கடல்போல் திரண்டிருக்கும் தமிழ்ச் சொந்தங்களே! திருச்சி என்றாலே திருப்புமுனை! இப்போது இந்தியாவுக்கே திருப்புமுனை ஏற்படுத்த நாம் திரண்டிருக்கிறோம்! பல திருப்புமுனைகளை தமிழ்நாட்டுக்கு கொடுத்து, தமிழினத்தின் முன்னேற்றத்துக்காக தன்னுடைய வாழ்நாளெல்லாம் உழைத்த தமிழினத் தலைவர் கலைஞரின் நூற்றாண்டுப் பரிசாக, ஒரு மகத்தான வெற்றியை கொடுப்பதற்கான துவக்கமாக இங்கு திரண்டிருக்கிறோம்!

> **நேரு அவர்கள் சொன்னது போல், கடந்த சட்டமன்றத் தேர்தலுக்கு முன்பு, 'தமிழ்நாட்டின் விடியலுக்கான முழக்கம்' என்ற எழுச்சிமிகு கூட்டத்தை ஏற்பாடு செய்து, இங்கு அழைத்து வந்தார் ஆருயிர்ச் சகோதரர் கே.என். நேரு. அதுதான் தமிழ்நாட்டில் அ.தி.மு.க. ஆட்சியை வீழ்த்தி கோட்டையில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியை அமர வைத்தது! உங்களில் ஒருவனான இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் முதலமைச்சராகப் பொறுப்பு ஏற்றுக் கொண்டேன். அன்று முதல், இந்தியாவே பாராட்டும் நல்லாட்சியை நடத்தி வருகிறேன்.**

### நாற்பதுக்கு நாற்பது வெற்றி நாம் எழுதப்போகும் புதிய வரலாறு!

வெற்றி என்றால் எப்படிப்பட்ட வெற்றி? நாற்பதுக்கு, நாற்பது! நாற்பதுக்கு, நாற்பது! நாம் எழுதப் போகும் புதிய வரலாற்றுக்கு முன், தந்தை பெரியாரையும் பேரறிஞர் அண்ணாவையும் தலைவர் கலைஞரையும் வணங்கி, இந்தப் பயணத்தைத் தொடங்குகிறேன். மாநாடு போல இந்த கூட்டத்தை ஏற்பாடு செய்திருக்கிறார் முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு அவர்கள்.

எல்லாவற்றுக்கும் தொடக்கமாக இருப்பது இந்தத் திருச்சிதான்! திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தலில் நிற்க வேண்டும் என்று 1956 ஆம் ஆண்டு முடிவெடுக்கப்பட்டது திருச்சி மாநாட்டில்தான்! திருச்சி பாதை எப்போதுமே வெற்றிப் பாதை! அதன் அடையாளமாகத்தான் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஆறு முறை ஆட்சிப் பொறுப்பை வழங்கியிருக்கிறார்கள் தமிழ்நாட்டு மக்கள்!

நேரு அவர்கள் சொன்னதுபோல், கடந்த சட்டமன்றத் தேர்தலுக்கு முன்பு, 'தமிழ்நாட்டின் விடியலுக்கான முழக்கம்' என்ற எழுச்சிமிகு கூட்டத்தை ஏற்பாடு செய்து, இங்கு அழைத்து வந்தார் ஆருயிர்ச் சகோதரர் கே.என்.நேரு. அதுதான் தமிழ்நாட்டில் அ.தி.மு.க. ஆட்சியை வீழ்த்தி கோட்டையில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியை அமர வைத்தது! உங்களில் ஒருவனான இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் முதலமைச்சராகப் பொறுப்பு ஏற்றுக் கொண்டேன். அன்று முதல், இந்தியாவே பாராட்டும் நல்லாட்சியை நடத்தி வருகிறேன்.

### இந்தியா கூட்டணி ஆட்சியை ஒன்றியத்தில் ஏற்படுத்துவோம்!

பாசிச பா.ஜ.க.வை வீழ்த்தி, இந்தியா கூட்டணியின் ஆட்சியை ஒன்றியத்தில் ஏற்படுத்துவதற்காக நடப்பதுதான், இந்த நாடாளுமன்றத் தேர்தல்!

தேர்தல் என்பதால் பிரதமர், இப்போது இந்தியாவில் இருக்கிறார்; அதனால் அடிக்கடி தமிழ்நாட்டுக்கு வருகிறார். இல்லை என்றால், பெரும்பாலும் வெளிநாட்டில்தான் இருப்பார். சமீபத்தில் சேலத்தில் உரையாற்றிய பிரதமர் மோடி அவர்கள், "தமிழ்நாட்டில் அவருக்கு செல்வாக்கு அதிகமாகிவிட்டதால், தி.மு.க.வினருக்குத் தூக்கம் வரவில்லை என்று பேசியிருக்கிறார். உண்மையில், தன்னோட ஆட்சி முடியபோகிறது என்று, பிரதமர் மோடிக்குத் தான் தூக்கம் வரவில்லை! அவருக்கு ஏற்பட்டிருக்கும் தோல்வி பயம், அவரின் முகத்திலும் – கண்ணிலும் நன்றாகத் தெரிகிறது!

சரி, தமிழ்நாட்டுக்கு இத்தனை முறை வந்தாரே, அவரிடம் நான் ஒரே ஒரு கேள்விதான் கேட்டேன். அதுக்கு ஒருமுறையாவது பதில் சொன்னாரா? வாரா வாரம் வந்தாலும் அவர் பதில் சொல்லவில்லை! இனி வந்தாலும், சொல்லவும் முடியாது! பத்தாண்டு காலம் ஆட்சி செய்த ஒரு பிரதமரால், தமிழ்நாட்டுக்குச் செய்த சிறப்புத் திட்டம் என்று ஒன்றே ஒன்றைக்கூட சொல்ல முடியுமா? இவர் நம்மை விமர்சிக்கிறார்!

இப்போது நான் சொல்கிறேன், நம்முடைய

தொடர்ச்சி 3- ஆம் பக்கம்

---

முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில்,

## க.பொன்முடி மீண்டும் அமைச்சராகப் பொறுப்பேற்றார் !

**சென்னை, மார்ச் 24 –**

**உச்சநீதிமன்றத்தின் கண்டனத்தை தொடர்ந்து, பொன்முடிக்கு பதவிப்பிரமாணம் செய்து வைக்க ஆளுநர் ஆர்.என்.ரவி அழைப்பு விடுத்தார். நேற்று முன்தினம் பிற்பகல் 3.30 மணியளவில் ஆளுநர் மாளிகையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், பொன்முடிக்கு ஆளுநர் ஆர்.என்.ரவி பதவிப் பிரமாணம் செய்துவைத்தார்.**

சொத்து வழக்கில் முன்னாள் அமைச்சர் பொன்முடிக்கு விதிக்கப்பட்ட தண்டனையை நிறுத்தி வைத்து உச்சநீதிமன்றம் அண்மையில் உத்தரவிட்டது. உச்சநீதிமன்ற உத்தரவைத் தொடர்ந்து, எம்.எல்.ஏ. பதவியில் பொன்முடி தொடர்வதாக சட்டப்பேரவைச் செயலகம் அறிவித்தது.

இதனைத் தொடர்ந்து பொன்முடிக்கு அமைச்சராக பதவிப் பிரமாணம் செய்து வைக்குமாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆளுநருக்கு பரிந்துரை செய்தார். ஆனால், இந்த பரிந்துரையை ஏற்க ஆளுநர் மறுத்து விட்டார்.



ஆளுநரின் இந்த நடவடிக்கையை எதிர்த்து தமிழ்நாடு அரசு உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தது. இந்த வழக்கு தலைமை நீதிபதி டி.ஒய். சந்திரசூட் தலைமையிலான அமர்வு முன்பு விசாரணைக்கு வந்தபோது, முதலமைச்சர் பரிந்துரைத்தும் பொன்முடிக்கு அமைச்சராக பதவிப்பிரமாணம் செய்து வைக்க மறுப்பது ஏன்? என ஆளுநரை உச்சநீதிமன்றம் கண்டித்தது. தண்டனையை நிறுத்தி வைத்த பிறகு இவ்விவகாரத்தில் தலையிட ஆளுநருக்கு எந்த அதிகாரமும் இல்லை என்றும், அரசியல் சாசன சட்ட விதிகளை ஆளுநர் பின்பற்ற வேண்டும் என்றும் நீதிபதிகள் உத்தரவிட்டனர். பொன்முடிக்கு மீண்டும் அமைச்சராக பதவிப் பிரமாணம் செய்துவைக்க ஆளுநருக்கு உச்சநீதிமன்றம் 24 மணிநேரம் கெடு விதித்திருந்தது. 24 மணி நேரத்திற்குள் ஆளுநர் நல்ல முடிவை எடுக்காவிட்டால் கடுமையான உத்தரவு பிறப்பிக்கப்படும் என்றும் உச்சநீதிமன்றம் எச்சரித்தது. இந்நிலையில், பொன்முடிக்கு பதவிப்பிரமாணம் செய்து வைக்க ஆளுநர் ஆர்.என்.ரவி அழைப்புவிடுத்து நேற்று முன்தினம் பிற்பகல் 3.30 மணியளவில் ஆளுநர் மாளிகையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், பொன்முடிக்கு ஆளுநர் ஆர்.என்.ரவி பதவிப் பிரமாணம் செய்துவைத்தார்.

முன்னதாக தமிழ்நாடு அரசு தொடர்ந்த வழக்கு உச்சநீதிமன்றத்தில் நேற்று முன்தினம் மீண்டும் விசாரணைக்கு வந்தபோது, பொன்முடியை அமைச்சராக பதவியேற்க, ஆளுநர் அழைப்பு விடுத்த தகவலை ஒன்றிய அரசின் அட்டர்னி ஜெனரல் பதிவு செய்தார். எனவே, ஆளுநருக்கு எதிராக எந்த உத்தரவுகளும் பிறப்பிக்க வேண்டாம் என ஒன்றிய அரசின் அட்டர்னி ஜெனரல் கோரிக்கை விடுத்தார்.

தனது செயலுக்கு ஆளுநர் ஆர்.என்.ரவி மன்னிப்பு கோரியதாகவும் அட்டர்னி ஜெனரல் வெங்கட்ரமணி தெரிவித்தார். இதைத்தொடர்ந்து ஆளுநரின் நடவடிக்கையை எதிர்த்து தொடரப்பட்ட மனு முடித்து வைக்கப்பட்டது. நாட்டின் ஜனநாயகம் உச்சநீதிமன்றத்தால் காப்பாற்றப்பட்டுள்ளதாக தமிழ்நாடு அரசு சார்பில் ஆஜரான அபிஷேக் சிங்கி, வில்சன் ஆகியோர் குறிப்பிட்டனர்.

இதனிடையே, அமைச்சராகப் பதவியேற்ற பொன்முடிக்கு மீண்டும் உயர்கல்வித் துறை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பொன்முடிக்கு பதவிப்பிரமாணம் செய்துவைத்து மீண்டும் உயர்கல்வித் துறையை ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்ற முதலமைச்சரின் பரிந்துரையை ஆளுநர் ஏற்றுக் கொண்டார்.

பொன்முடிக்கு மீண்டும் உயர்கல்வித் துறை ஒதுக்கீடு செய்யப்பட்டது.

---

## பாஜக கூட்டணி

